This Question Paper consists of **37** questions [Section-A **(19)** + Section-B **(9+9)**] and **7** printed pages.
7 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 37 வினாக்கள் உள்ளன [பகுதி அ-(19) + பகுதி ஆ-(9 + 9)].

Roll No. | | | | | | | | | | | | | **Code No. 55/SS/O/TM**

Set - A

(தமிழ்)
(TAMIL)
(304)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : _____

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : **1.** _____

2. _____

பொதுக்குறிப்புகள் :

1 தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2 வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத் தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3 வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4 உங்களது வினாத்தாளின் கோடு எண் **55/SS/O/TM** மற்றும் செட் **A** என்று எழுதுங்கள்.

(தமிழ்)
(TAMIL)
(304)

காலம் : 3 மணி] [மதிப்பெண்கள் : 100

அறிவிப்பு : (1) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(2) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(3) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப் பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(4) வினாவிற்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி - அ

* **குறிப்பு :** எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ஓரிரு சொற்களில் விடை தருக. 1×17=17

1 பாரதியாரின் நூல்கள் இரண்டினை எழுதுக. 1

2 பாரதிதாசனின் இயற்பெயர் என்ன ? 1

3 'சிறைகள்' கவிதையில் இதயத் துடிப்ப அதிகரிக்காததன் காரணமாக கூறப்படுவது என்ன ? 1

4 நாலடியார் பாடல்களை எழுதியவர் யார் ? 1

5 ஒப்புரவு ஆற்றல் - விளக்குக. 1

6 ஆயம் - சொல்லின் பொருள் யாது ? 1

7 அகநெறி இன்னார்க்குரியது என்று கூறாமையின் காரணம் என்ன ? 1

8 காவலன் பூனைக்கு எந்தக் கிண்ணத்தில் பாலை வைத்தான் ? 1

9 'கதவு' சிறுகதையில் ரங்கம்மாளின் ஊரில் எத்தனை ஆண்டுகளாக மழை பொழியவில்லை ? 1

10 'வாசி தீரவே' என்று தொடங்கும் பாடல் எத்தலத்தில் பாடப்பட்டது ? 1

11 'வேலை கொடுத்தவன்' சிறுகதையில் கந்தன் எங்கு வேலை செய்தான் ? 1

12 காலத்தைக் குறிக்கும் வினை உறுபுகள் மறைந்து வருவது ..... ஆகும். 1

13 தலை வணங்கினான் - இலக்கணக் குறிப்பு தருக. 1

14 வயலும் வயல் சார்ந்த பகுதிகளும் ..... எனப்படும். 1

15 மலையருவி என்பதில் வந்துள்ள உடம்படுமெய் ..... ஆகும். 1

16 புணர்ச்சி ..... வகைப்படும். 1

17 FONT - இச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் ..... ஆகும். 1

18 (அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×3=12

(1) தாய் புத்தரிடம் எதற்காக வந்ததாகக் கூறுகிறாள் ?

(2) வள்ளுவர் கூறும் வலி வகைகள் யாவை ?

(3) சிற்றிலக்கியங்கள் ஐந்தனை கூறுக.

(4) செத்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே விளக்குக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 4×3=12

(1) எலிகளை ஒழிக்க அமைச்சர்கள் கூறிய வெவேறு யோசனைகள் யாவை ?

(2) ஆடற்கலை வளர்த்த பெண்களுள் மும்மூர்த்திகள் என்பவர் யாவர் ?

(3) சிறுகதை எழுதுவதற்குரிய ஆயத்த பணிகள் யாவை ?

(4) செம்மொழியின் பண்புகளில் நான்கனைக் கூறுக.

(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×2=8

(1) நூல் நிலையங்களின் வகைகள் யாவை ?

(2) நீர் மாசுபடதலுக்கான காரணங்கள் யாவை ?

(3) விளம்பரம் என்ற சொல்லின் பொருள் யாது ?

19 * **குறிப்பு :** ஒரு பக்க அளவில் விடையளிக்க.

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **6×2=12**

(1) சிலப்பதிகாரம் வழக்குரை காதைச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(2) செல்வம் நிலையாமை உறித்து நலடியார் கூறும் கருத்துகளை எழுதுக.

(3) சிறைகள் - என்ற புதுக் கவிதையின் வழியாக இன்குலாப் கூறும் தொலை நோக்குத் திட்டத்தை குறிப்பிடுக.

(4) வையத்து வாழ்வீர்காள் - என்ற பாடலின் பொருளை எழுதுக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. **6×3=18**

(1) இலக்கிய வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதுக.

(2) விளையாட்டுக் கலையின் சிறப்புக் குறித்து எழுதுக.

(3) மதுரை மாநகரில் உள்ள சுற்றுலாச்சிறப்புப் பற்றி எழுதுக.

(4) தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உயர்வான சிந்தனைகள் குறித்து எழுதுக.

(5) கந்தனின் மனித நேய உணர்வை விளக்குக.

(6) தமிழில் உள்ள பக்தி இலக்கியங்கள் பற்றி எழுதுக.

(இ) ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும். **6×1=6**

(1) இராமலிங்கரிடம் காணப்பட்ட உயிர் இரக்கப் பண்பை விவரிக்க.

(2) முத்துலெட்சுமி அம்மையார் தோற்றுவித்த அமைப்புகள் குறித்து எழுதுக.

பகுதி - ஆ

விருப்பப் பாடம் - 1
(இணையமும் தமிழும்)

20 மதுரை திட்ட நூலகத்தைத் தொடங்கியவர் - **1**

(அ) டி. குமரேசன் (ஆ) ரோஜா முத்தையா

(இ) டாக்டர் கல்யாண சுந்தரம் (ஈ) டாக்டர் ஆல்பிரட்

21 இணையத்தில் தமிழ் கற்க பல்லூடக வசதி உண்டா ? **1**

22 மின்னஞ்சல் முகவரி பெற ஆதாரமானவை எவை ? **1**

23 INPUT - என்பதன் தமிழ்ச் சொல் என்ன ? **1**

24 நிகழ்வுக் குறிப்பு எங்கெங்கு எடுக்கப்படுகிறது ? **1**

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. **4×1=4**

25 மின்னஞ்சல் - குறிப்பு வரைக.

26 தமிழ் கற்றல் தொடர்பான இணைய தளங்கள் யாவை ?

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. **6×1=6**

27 மின்னஞ்சலின் சிறப்புகள் குறித்து கட்டுரை வரைக.

28 முகவருக்குத் தேவையான பேச்சுத் திறன் பற்றி எழுதுக.

விருப்பப்பாடம் - 2
(மேலாண்மை இயலும் தமிழும்)

20 உற்பத்தி மேலாண்மையில் கவனிக்க வேண்டியவை யாவை ? **1**

21 நிதி மேலாண்மையின் முக்கியப் பணிகள் யாவை ? **1**

22 கடிதம் என்பது **1**

23 நிகழ்வுக் குறிப்பின் நீண்டகாலப் பயன்கள் யாவை ? **1**

24 செய்தித் தொகுப்பு என்றால் என்ன ? **1**

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. **4×1=4**

25 கடிதம் - விளக்கம் தருக.

26 உற்பத்தி மேலாண்மை - சிறுகுறிப்பு தருக.

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. **6×1=6**

27 மேலாண்மைத் தொடர்பின் போது கவனிக்க வேண்டிய கூறுகள் யாவை ?

28 மேலாண்மையின் நிலைகளைப் பற்றிக் கூறுக.